செ.வெ.எண்: 64 நாள்: 27.02.2020

**தூத்துக்குடி மாநகராட்சி நகர்ப்புற வாழ்வாதாரம் நிதியின்கீழ் சிவந்தாகுளம் தூத்துக்குடி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் பயிற்சி பெறும் சிறப்புத்திறனுடைய குழந்தைகள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக ரூ.16.75 லட்சம் மதிப்பில் பள்ளி பேருந்தினை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் கொடியசைத்து பள்ளிக்கு வழங்கினார்.**

---

தூத்துக்குடி மாநகராட்சி நகர்ப்புற வாழ்வாதாரம் நிதியின்கீழ் சிவந்தாகுளம் தூத்துக்குடி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் பயிற்சி பெறும் சிறப்புத்திறனுடைய குழந்தைகள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக ரூ.16.75 லட்சம் மதிப்பில் பள்ளி பேருந்து வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (27.02.2020) சிவந்தாகுளம் தூத்துக்குடி மாநகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் கலந்துகொண்டு, பேருந்தினை பள்ளிக்கு வழங்கினார். மேலும் பேருந்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் திரு.வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.பி.சண்முகநாதன் (திருவைகுண்டம்), திரு.சின்னப்பன் (விளாத்திகுளம்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பள்ளி கல்வி துறை மூலம் பல்வேறு திட்டங்களை அறிவித்து மாணவ, மாணவியர்கள் சிறந்த கல்வி கற்க வழிவகை செய்தார்கள். அவ்வகையில் செயல்படும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் தொடர்ந்து பள்ளி கல்வி துறை மூலம் பல்வேறு திட்டங்களை அறிவித்து மாணவ, மாணவியர்கள் இன்றைய விஞ்ஞான வளர்சிக்கேற்ப அறிவை பெருக்கி கொள்ளும் வகையில் பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக மாற்றுத்திறனாளிகள் மற்றும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளும் பள்ளிக்கு சென்று கல்வி கற்க அனைவருக்கும் கல்வி இயக்கம் திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுத்ததன் அடிப்படையில் இன்று அதிகமான மனவளர்ச்சி குன்றிய மாணவ, மாணவியர்கள் பள்ளிக்கு வருகை தருகிறார்கள்.

தூத்துக்குடி மாநகராட்சி நகர்ப்புற வாழ்வாதாரம் நிதியின்கீழ் சிவந்தாகுளம் தூத்துக்குடி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் பயிலும் சிறப்புத்திறனுடைய குழந்தைகள் அவர்களது பெற்றோர்களுடன் பள்ளிக்கு வருவதற்கு ஏதுவாக ரூ.16.75 லட்சம் மதிப்பில் பேருந்து இன்று வழங்கப்பட்டது. இந்த பள்ளியில் 0-5 வயது வரையிலான குழந்தைகள் மற்றும் 6-14 வயது வரையிலான குழந்தைகள் என இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு மொத்தம் 60 சிறப்புத்திறனுடைய குழந்தைகளுக்கு சிறப்பு கல்வி, பிஸியோதெரபி, கற்றல், கேட்டல் ஆகிய பயிற்சிகள் சிறப்பாக அளிக்கப்பட்டு வருகிறது. இப்பள்ளியில் கல்வி கற்கும் குழந்தைகளில், தூத்துக்குடி மாநகராப் பகுதிக்கு அப்பால் பேரூரணி, மாப்பிள்ளையூரணி, துப்பாஸ்பட்டி, பழையகாயல் போன்ற பகுதிகளில் இருந்து வருகை தரும் 50 சிறப்புத்திறனுடைய குழந்தைகள் இதன் மூலம் பயன் அடைவார்கள் என பேசினார்.

அதனைத்தொடர்ந்து, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள், சிவந்தாகுளம் மாநகராட்சி பள்ளியில் சிறப்புத்திறன் கொண்ட குழந்தைகளுக்கு பயிற்சியளிப்பதை பார்வையிட்டார். மேலும் அங்கு செய்யப்பட்டுள்ள சிறப்பு வசதிகளையும் பார்வையிட்டார். மேலும் பள்ளியில் பயிலும் சிறப்புத்திறனுடைய குழந்தைகளுக்கு மாநகராட்சி மூலம் மதிய உணவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள மாநகராட்சி ஆணையரிடம் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் திரு.மோகன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு.சுதாகர், மாநகராட்சி செயற்பொறியாளர் திரு.பார்திபன், மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் திரு.செல்வகுமார், உதவி செயற்பொறியாளர் திரு.சரவணன், உதவி பொறியாளர் திரு.பிரின்ஸ், மாநகராட்சி சுகாதார மருத்துவ அலுவலர் மரு.அருண்குமார், சுகாதார அலுவலர்கள் திரு.ஸ்டாலின், திரு.ராஜசேகர், முக்கிய பிரமுகர்கள் திரு,ஆறுமுகநயினார், திரு.டேக் ராஜா மற்றும் ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.**